CSI Tamil Parish - Abu Dhabi

2000 2025 25 Years

# தூது

நற்செய்தி துணுக்குகள்

கர்த்தர் நல்லவர்,

இக்கட்டு நாளில்

அரணான கோட்டை;

தம்மை நம்புகிறவர்களை

அறிந்திருக்கிறார்.

நாகூம் 1:7



ஜனவரி - 2025 (மடல் - 25)

செய்தி – 1

# பொருளடக்கம்




| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| பெண்கள் பகுதி | 6 |
| Children's Corner | 10 |
| வேத வினாக்கள் | 21 |
| கோதுமை மணி | 24 |
| துணுக்குகள் | 26 |
| ஆலய பக்கம் | 28 |

# கர்த்தர் நல்லவர்

**கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார். நாகூம் 1:7**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்திலே புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். புதிய ஆண்டு நமக்கும் நமது குடும்பத்திற்கும், திருச்சபைக்கும், தேசத்திற்கும் ஆசீர்வாதமான நாட்களாகக் காணப்பட ஆண்டவர் அருள் செயவாராக.

நாகூம் என்பதற்கு **கர்த்தரின் ஆறுதல்** அல்லது **யாவே ஆறுதல் அளிக்கிறார்**. என்று பொருள். எல்கோசா ஊரைச் சார்ந்தவர் என்பதைத் தவிர இவரைப் பற்றிய குறிப்புகள் எதுவும் சொல்லப்படவில்லை. நாகூம் புத்தகத்தின் மையக்கருத்து: சிறப்பு மிக்க நகரமாகிய நினிவேயின் அழிவை விவரிப்பதோடு, கர்த்தர் தமது எதிரிகளை அழித்து, தம்மை நம்புவோரை எப்படி பாதுகாக்கிறார் என்பதைச் செல்கிறது. நினிவே நகரம் ஆசீரிய பேரரசின் தலைநகர். புகழின் உச்சியில் இருந்தது. அன்றைய காலத்தில் நினிவேக்கு இணையான நகரம் உலகில் எங்குமில்லை. அதிகாரவெறியாலும், பெருமைக்காகவும் மற்ற நகரங்களை கைப்பற்றி தங்கள் எல்லையை விரிவாக்கிக் கொண்டார்கள். அதோடு தாங்கள் வெற்றி கொண்ட நாட்டு மக்களை மிகக் கடுமையாகக் கொடுமைப்படுத்தினார்கள். இந்தச் சூழலில் செப்பனியா தீர்க்கதரிசி, நினிவேக்கு எதிராக தீர்க்கதரிசனம் சொல்கிறார் [செப்பனியா 2:13]. பாபிலோன் அரசன் கிமு 614ல் நினிவே பட்டணத்தை அழித்து தரைமட்டமாக்குகிறான். அதேவேளையில் ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்ட மக்களுக்குக் கர்த்தர் எவ்வளவு நல்லவராக இருக்கிறார் என்பதை நாகூம் புத்தகம் விளக்குகிறது.

**1. கர்த்தர் மீது நம்பிக்கை கொண்ட மக்களுக்குக் கர்த்தர் நல்லவர்:**

ஆண்டவரைப் பற்றி திருமறை சொல்லுகின்ற முக்கிய கருத்து, ஆண்டவர் எல்லா நிலைகளிலும் நல்லவராக இருக்கிறார். சங்கீதம் 34:8. மூன்று நிலைகளில் கர்த்தர் நல்லவர். 1. படைப்பில் நல்லவர்: மனிதனுக்கு வேண்டிய அனைத்தையும் படைத்து, அனுபவிக்கின்ற அதிகாரத்தையும் கொடுக்கிறார். 2. தமது பேரன்பில் நல்லவர்: ஆபிரகம் வழியாகவும், எகிப்தின் விடுதலைப் பயணத்திலும் கர்த்தர் நல்லவராக இருக்கிறார். 3. மீட்புத் திட்டத்தில் நல்லவர்: நம்மை மீட்பதற்காகத் தமது ஒரே மகனையே நமக்காகப் பரிசாகக் கொடுக்கிறார். அவரின் நன்மைத் தன்மைக்கு நாம் ஒருவரும் உரிமை கொண்டாட இயலாது. நாம் எல்லோரும் பாவிகள். என்றாலும், **கடவுளின் நன்மைத் தன்மையை ருசி பார்க்கின்ற உரிமையை ஆண்டவர் நமக்குக் கொடுக்கிறார்**. சங்கீதம் 73:1. கர்த்தர் நல்லவர் என்றால், நம் வாழ்வு ஏன் கடினமாக இருக்கிறது? ஏனென்றால், **கடினமான வாழ்வில்தான் நாம் ஆண்டவரின் அன்பை ருசிக்க முடியும்.** ஆண்டவர் மீது நம்பிக்கைக் கொள்கின்ற அனைவருக்கும் ஆண்டவர் நல்லவராக இருக்கிறார்.

**2. கர்த்தர் மீது நம்பிக்கை கொண்ட மக்களுக்குக் கர்த்தர் அரணாக இருக்கிறார்:**

ஆண்டவர் நமக்கு இக்கட்டு நாளிலே பாதுகாப்பான கோட்டை என்கிறார். கடவுளின் பாதுகாப்பு என்பது அவருடைய பராமரிப்போடு இணைந்திருக்கிறது. ஆண்டவரின் பாதுகாப்புக்கும் பராமரிப்புக்கும் யோசேப்பின் வரலாறு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு. ஆண்டவர் தமது மீட்பின் திட்டத்தை நிறைவேற்ற தீமைகளை நன்மையாக மாற்றுகிறார். பஞ்சத்தில் யாக்கோபின் குடும்பத்தைக் காப்பாற்றுகிறார். ஆதியாகமம் 45:5 யாக்கோபின் வம்சம் அழிந்தால், மேசியா பிறக்க வேண்டும் என்கின்ற கடவுளுடைய திட்டம் தோற்றுப் போகும். அதோடு முழு உலகையும் ஆண்டவர் பாதுகாக்கிறார். கடவுளின் பாதுகாப்பும் பராமரிப்பும் சங்கீதம் 121 விவரிக்கிறது. **ஒரு தாய் தன் குழந்தையைப் பாதுகாத்து பராமரிப்பது போல ஆண்டவர் பாதுகாக்கிறார்.** குறிப்பாக தாயின் கருவறையின் பாதுகாப்பை ஆண்டவர் கொடுக்கிறார்.

**3. கர்த்தர் மீது நம்பிக்கை கொண்ட மக்களை கர்த்தர் அறிந்திருக்கிறார்:**

கடவுளின் சிறப்பானத் தன்மைகளில் ஒன்று, மனிதனின் நினைவு சொல் செயல் அனைத்தையும் ஆண்டவர் அறிந்திருக்கிறார் என்பது. அறிதல் Knowing என்பது ஒருவரிடம் தனிப்பட்ட மற்றும் நெருக்கமான உறவைக் காட்டுகிறது. நெருக்கமான உறவு இருந்தால் மட்டுமே முழுமையாக அறிய முடியும். கர்த்தர் ஆபிரகாமை அறிந்திருக்கிறார். ஆதியாகமம் 18:19. இது ஆண்டவருக்கும் ஆபிரகாமுக்கும் இருக்கின்ற தனிப்பட்ட நெருக்கத்தைக் காட்டுகிறது. சங்கீதக்காரன் ஆண்டவர் தன்னை முழுவதுமாக ஆராய்ந்து அறிந்திருக்கிறார் என்கிறான். சங்கீதம் 139:1-12 கர்த்தர் அனைத்தையும் அறிந்திருப்பதால் அவரை ஏமாற்ற இயலாது. நாம் தப்பிச் செல்லவும் முடியாது. எப்பொழுதும் கடவுளால் கண்காணிக்கப்படுகிறோம். ஒரு அன்பான பெற்றோர் தன் அன்புக்குரிய குழந்தையைக் கண்காணிப்பது போல் ஆண்டவர் நம்மை கவனிக்கிறார்.

புதிய ஆண்டுக்குள் வந்திருக்கின்றோம் கடந்த ஆண்டுகளில் நம் வாழ்வில் ஆண்டவர் நல்லவராக இருந்து, பாதுகாத்து பராமரித்து வந்திருக்கிறார். இந்தப் புதிய ஆண்டிலும் ஆண்டவர் நமக்கு நல்லவராகவே இருக்கிறார்.

கர்த்தர் உங்களையும் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

**அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : asamuelrev@gmail.com*

*கிறிஸ்துவின் பணியில்*
*தங்கள் அன்பிற்குரிய ஆயர்*
Rev. Dr. A. Samuel

***“இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும், யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்.” எரேமியா 31:31***

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஆண்டுகள் முழுவதும் ஆண்டவர் நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் அற்புதமாககவும், ஆச்சரியமாகவும் பாதுகாத்து வழிநடத்தி வந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த புதிய ஆண்டு நமக்கும் நமது குடும்பத்திற்கும் ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் கிருபை செய்வாராக.

இரண்டுபேர்களிடையே அல்லது இரண்டு குழுக்களிடையே நடைபெறுகின்ற ஒப்பந்தத்தை உடன்படிக்கை என்கிறோம். பொதுவாக உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தங்கள் சமநிலையற்றதாகவே இருக்கும். வலிமை மிக்கவர்கள், வலிமை குறைந்தவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாக வாக்களிப்பதும், வலிமை குறைந்தவர்கள் வலிமை மிக்கவர்களுக்குப் பணிபுரிய ஒத்துழைப்பதாகவும் வாக்களிப்பார்கள். இதனால் வலிமை மிக்கவர்கள், தங்களின் தேவைக்கு ஏற்றவாறு கடுமையான நிபந்தனைகளை விதிப்பது வழக்கம்.

திருமறையில் உடன்படிக்கை செய்து கொண்டதன் அடையாளமாகச் சில மரபுகளாலும், சடங்குகளாலும் உடன்படிக்கை புனிதப்படுத்தப்படுகிறது. (யாத். 24:38) குறிப்பாக விலங்குகளை இரண்டாக வெட்டி வைத்து, எதிர்காலத்தில் இவ்வுடன்படிக்கையை மீறினால் கிடைக்கும் சாபங்களை அறிவித்துக்கொண்டே விலங்குகளின் துண்டங்களிடையே கடந்த செல்வார்கள் (எரேமியா 34:18). இறுதியாக உடன்படிக்கைக்குச் சாட்சியாக இருக்குமாறு ஒரு மரம் அல்லது ஒரு கல் நாட்டப்படும் (ஆதி 21:33, 31:48).

ஆனால் ஆண்டவர் இஸ்ரவேல் மக்களோடு செய்து கொண்ட உடன்படிக்கை முற்றிலும் மாறுபட்டது. வலிமை மிக்க ஆண்டவர் எளிய இஸ்ரவேல் மக்களோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தைத் திருமறை விளக்குகிறது. அனைத்து ஆற்றலும் வலிமையும் நிறைந்த சர்வ வல்ல ஆண்டவர், உன்னதத்திலிருந்து தாழ குனிந்து பூமியின் கடை முனையில் கிடக்கின்ற மிகச் சிறிய கூட்டமான இஸ்ரவேல் மக்களின் கரத்தைப் பிடித்து நான் உன் தேவன்: நீ என் ஜனம் என்று உடன்படிக்கை செய்து கொள்கிறார். தாமே வலிய வந்து உடன் படிக்கைச் செய்கிறார். (உபா 7:6,7) இந்த உடன்படிக்கை வழியாக பூமியின் எல்லா ஜனங்களிலும் நீங்கள் என் சொந்த உடைமையாக இருப்பீர்கள் என்று ஆண்டவர் வாக்குக் கொடுக்கிறார். (யாத் 19:5,6; 23:20-31) இதற்குப் பிரதிபலனாக ஆண்டவரை மட்டுமே இஸ்ரவேல் மக்கள் வழிபட வேண்டும் என்கின்ற நிபந்தனையையும் விதிக்கிறார்.

இறைவன் தம் உடன்படிக்கையில் உறுதியாய் இருந்தார். ஆனால் இஸ்ரவேல் மக்கள் கீழ்ப்படியாமல் உடன்படிக்கையை முறித்துப்போட்டார்கள் (எரேமியா 22:9). ஆனாலும் ஆண்டவர் மனுக்குலத்தின் மீது மிகுந்த அன்பு வைத்திருந்ததால், புதிய உடன்படிக்கை செய்வேன் என்கிறார். அதை அவர்கள் இதயத்தில் எழுதுவேன் என்கிறார் (எரேமியா 31:31-33).

இந்தப் புதிய உடன்படிக்கையை இயேசு கிறிஸ்து வழியாக, ஆண்டவர் நம்மோடு செய்து கொண்டிருக்கிறார். அவர் மீது விசுவாசம் வைக்கின்ற அனைவரும் அவருடைய பிள்ளைகளாகும் பாக்கியத்தைப் பெற்றிருக்கின்றோம். (யோவான் 1:12) முன்பு தூரமாயிருந்த நாம் இறைவனோடு சேருகின்ற சிலாக்கியத்தைக் கிறிஸ்து மூலமாகப் பெற்றிருக்கின்றோம் (எபேசியர் 2:13-19). எனவே, இந்தப் புதிய ஆண்டில் ஆண்டவர் நம்மேடு செய்திருக்கின்ற உடன்படிக்கையை நாம் ஏற்றுக்கொண்டு, அதை நம்முடையதாக்குவோம். நமது இதயத்தை ஆண்டவருக்கு ஒப்புக் கொடுத்து, அவரது வல்லமையினால் ஒருபொழுதும் உடன்படிக்கையில் பின்வாங்காதிருக்கத் தீர்மானிப்போம். கர்த்தர் உங்களையும், உங்கள் குடும்பங்களையும் ஆசிர்வதிப்பாராக!

**அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**

**மீட்பரின் பணியில்**
***திருமதி.ஜெபா சாமுவேல்***

**பிப்ரவரி மாத தலைப்பு**

**ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்வு**

***A blessed life***

# பெண்கள் பகுதி

## நல்லவராகிய கர்த்தர் அருளும் நன்மைகள்

நம்மை படைத்து, இந்த அழகிய உலகை ஆளும் அதிகாரத்தையும் நமக்கு கொடுத்த நம் தேவனாகிய கர்த்தர் நல்லவர். அவர் எல்லார் மேலும் தயையுள்ளவராயிருக்கிறார் [சங்.145:9]. நல்லவராகிய நம் தேவன் பட்சபாதமுள்ளவரல்ல. அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார் [மத்தேயு 5:25].

**யாருக்கு கர்த்தர் நல்லவர்?**

♥ நல்லவராகிய கர்த்தர் தமது மிகுந்த கிருபையினிமித்தம் அனைவர் மேலும் நன்மையை பொழிந்தாலும், **கர்த்தரை தன் வாழ்க்கையில் அனுமதித்தவர்கள் மாத்திரமே,** அவர் அருளும் நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியும். அவர்கள் மாத்திரமே கர்த்தர் நல்லவர் என்பதை தங்கள் வாழ்வில் ருசித்து அனுபவிக்க முடியும்.



கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் [சங். 34:8]. சூழ்நிலைகளைக் காணாது அவரை நம்பியிருக்கிறவர்கள் அவரை எல்லா காலத்திலும் நல்லவராகக் காணமுடியும். மாற்கு 6:45 முதல் 52 வரையுள்ள வேத வசனங்களை வாசிக்கும்போது, இயேசு கரையிலே தங்கிவிட சீஷர்கள் மட்டும் படகில் செல்கின்றனர். அதிகாலையில் காற்று அடித்ததின் காரணமாக சீஷர்கள் தண்டு வலிக்க கஷ்டப்பட்டனர். நல்லவராகிய இயேசு, அவர்களை காற்றில் மூழ்க விடவில்லை. மாறாக அச்சமயத்தில் இயேசு அவர்களண்டை காணப்பட்டார். ஆனால் சீஷர்களோ அவரை ஒரு ஆவி என்று எண்ணி கூச்சலிட்டனர். இயேசுவோ அவர்களிடம், “கவலைப்படாதீர்கள், நான் தான் பயப்படாதிருங்கள்” என்று தேற்றினார். பிறகு அவர் சீஷர்கள் இருந்த படகினுள் ஏறிக்கொண்டார். காற்று அமைதியாயிற்று! இயேசு படகில் ஏறியவுடன் காற்று அமைதியாயிற்று.

♣ நல்லவராகிய கர்த்தரை நம் வாழ்க்கை படகில் ஏற அனுமதிக்கும்போது, நம்மை சுற்றியுள்ள சூழ்நிலைகள் பதட்டமாய் இருந்தாலும் அமைதலாய் மாறும். அவரை நம் வாழ்க்கை படகில் ஏற அனுமதிக்கவில்லையெனில் அவர் நல்லவராய் இருந்தாலும், நாம் அதை அறிந்துகொள்ள முடியாது.

♥ **தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர் [புலம்பல் 3 :25].**



கர்த்தருக்கு காத்திருக்கப் பழகின அனைவரும் அவர் நல்லவர் என்பதை கண்டுகொள்ள முடியும். இதற்கு வேதாகமத்தில் அநேக எடுத்துக்காட்டுகள் உள்ளன. கானாவூர் கலியாணத்தில் இயேசுவின் தாயாகிய மரியாள், திராட்சரம் குறைவுபட்டபோது இயேசுவிடம் அதை தெரிவிக்கிறார் [யோவான் 2]. இயேசுவோ “என் வேளை இன்னும் வரவில்லை” என்று கூறுகிறார். அதைக் கேட்டு மரியாள் ஆச்சரியப்படவுமில்லை, கோபப்படவுமில்லை. மரியாள் வேலைக்காரரை நோக்கி: “அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள்” என்று மட்டும் கூறினார். அதன்பின் நடந்தது நாம் அனைவரும் அறிந்ததே. குறைவை நிறைவாக்கி ருசியான ரசம் பரிமாறப்பட்டது.

கர்த்தரின் வேளை வரும் வரை மரியாள் காத்திருந்து, தன் மகனின் முதல் அற்புதத்தை அமைதியாகக் கண்டு சந்தோஷப்பட்டு தேவனை துதித்திருப்பாள் நிச்சயமாக.

- நம் வாழ்விலும் கானாவூர் கலியாண வீடு போல் குறைவுகள் வரலாம். ஒரு வேளை ஜெபிக்கும்போது பதில் வரரமல் இருக்கலாம். அல்லது தாமதிக்கலாம். அப்போது சோர்வடைந்து போகாமல் நம்பிக்கையோடு நல்லவராகிய கர்த்தரின் வேளை வரும் வரை காத்திருக்கக் கற்றுக் கொண்டால், ஏற்ற வேளையில் நாமும் கர்த்தர் நல்லவர் என்பதை ருசிக்க முடியும்.

♥ **சுத்த இருதயமுள்ளவர்களாகிய இஸ்ரவேலருக்கு தேவன் நல்லவராகவே இருக்கிறார்[சங்கீதம் 73:1]**

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள் [மத்தேயு 5:8]. பரிசுத்தமுள்ள தேவனை தரிசிக்க, பரிசுத்தமுள்ள இருதயம் வேண்டும். நம் இருதயம் தூய்மையாய் இருந்தால் மட்டுமே நம் தேவனிடம் நாம் சேர முடியும். சவுல் ராஜா தன் கீழ்ப்படியாமையினிமித்தம் தன்னுடன் வாசம் பண்ணிய தேவனுடைய ஆவியை இழந்து விட்டார். இக்கட்டு வந்தபோது, இக்கட்டில் அரணான தேவனிடம் சவுலால் ஆலோசனை கேட்க முடியவில்லை. அதினிமித்தம் அவர் முடிவு பரிதாபமான முடிவானது.



ஆனால் தாவீதோ தவறுகள் செய்தபோது தேவனிடம் ஒப்புரவாகி, ‘தேவனே சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்’ என்று மன்றாடினார். தேவ ஆவி அவரோடு தங்கியிருந்தார். அவருடைய காரியங்களை சித்திக்கும்படி தேவன் அனுக்கிரகம் பண்ணினார். இக்கட்டில் அரணான கர்த்தரை தன் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் ருசித்து நிறைவான வாழ்வை வாழ்ந்தார் தாவீது.

- ‘தேவனே சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்’ என்ற தாவீதின் விண்ணப்பம் நம் அனுதின விண்ணப்பமாக இருக்க வேண்டும். உலகத்தால் கறைபடாது, நல்லவராகிய தேவனின் வழிநடத்துதலை அனுதினம் அனுபவிக்க சுத்த இருதயம் நமக்கு அவசியமான ஒன்று.

இப்படியாக இயேசுவை நம் வாழ்க்கை படகில் அனுமதித்து, அவருடைய பாதத்தில் காத்திருந்து, சுத்த இருதயமுள்ளவர்களாய் இருக்கும்போது, நம் வாழ்வின் ஒவ்வொரு நொடிப்பொழுதிலும், கர்த்தர் நல்லவர் என்பதை நாம் உணர முடியும். ரோமர் 8:28 கூறுகிறபடி, நாம் அவரிடத்தில் முழுமையாக அன்புகூர்ந்து வாழும்போது, தேவன் அனைத்து காரியங்களையும், நம் வாழ்வில் நன்மையாக மாற்றித் தருவார். நம் சூழ்நிலைகள் அனைத்துமே, கர்த்தர் நல்லவர் என்பதை நாம் ருசிக்க வழிகாட்டும்.

**நல்லவராகிய இயேசுவை பிறருக்கு காட்ட வேண்டும்**

இயேசு நல்லவர் என்று வாழ்வில் கண்ட நாம், அவரை நம் செய்கைகளின் மூலம் பிறருக்கு காட்டவேண்டும். நல்ல மேய்ப்பனாகிய நம் இயேசுவை அறியாத மக்கள் ஏராளம். அவர்களை மந்தையில் சேர்க்க பரிசுத்த ஆவியின் துணை கொண்டு செயல்பட வேண்டியது நம்மேல் விழுந்த கடமையாகும். உமக்குப் பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும், நீர் உண்டுபண்ணிவைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது! [சங்கீதம் 31:9] என்பதின்படி, கர்த்தர் வைத்திருக்கும் நன்மையை நம்மை சுற்றியுள்ளவர்களும் அறிந்து கொள்ள நம் வாழ்க்கை ஒரு வழிகாட்டியாய் இருக்கட்டும். அப்பொழுது “என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன் [சங். 23:6] என்று சங்கீதக்காரனோடு சேர்ந்து நாமும், நம்மை சுற்றியுள்ளவர்களும் தைரியமாய் கூற முடியும்.

**ஜெபசீலி ஆசீர்**

## வேதாகமப் பெண்கள்

### எடுபடாத நல்ல பங்கின் உடைமையாளி

**“லாசருவின் சகோதரி - மரியாள்”**

**[லூக்கா 10:34-42, யோவான் 11:1-45; 12:1-9]**

**யார் இந்த மரியாள்?**

மார்த்தாள், லாசரு என்பவர்களின் சகோதரி. இவர்கள் பெத்தானியா என்னப்பட்ட கிராமத்தில் வாழ்ந்து வந்தார்கள். இயேசுவால் மிகவும் நேசிக்கப்பட்ட குடும்பம். இவர்கள் வீடு இயேசு இளைப்பாறும் இடமாக இருந்தது. இயேசுகிறிஸ்து வரும்போதெல்லாம் அவரை உபசரிப்பதில் ஆர்வம் காட்டினாள் மார்த்தாள். மரியாளோ இயேசுவின் பாதத்தில் அமர்ந்து தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்.

**மரியாள் தெரிந்தெடுத்த பங்கு என்ன?**

இயேசுவின் வசனத்தைக் கேட்கும் நல்ல பங்கு. மார்த்தாள் செய்ததும் நல்லதுதான். ஆனால் இயேசு மெச்சினது மரியாள் செய்த காரியத்தையே. ஏனென்றால் அவளுடைய பாதத்தில் அமரத் தகுந்த நேரத்தை ஒதுக்க வேண்டும். ஓடி ஓடி ஊழியம் செய்கிறோம். ஆனால் ஆண்டவருடைய வசனத்தை வாசிக்கவும், தியானிக்கவும் நேரமில்லை. பெண்களாகிய நாம் ஆண்டவருடைய பாதத்தில் அமரும்போது விசுவாசம் வளரும். சவால்களை சந்திக்க தேவபெலன் கிடைக்கும்.

**நேசரின் பாதத்தை பற்றிக்கொண்ட நல்ல பங்கு**

- ♣ இயேசுவின் பாதம் – தியான பீடம்
- ♣ இயேசுவின் பாதம் – ஜெபிக்கும் இடம்
- ♣ இயேசுவின் பாதம் – கண்ணீர் சிந்தும் இடம்
- ♣ இயேசுவின் பாதம் – பிரச்சனைக்கு முடிவு காணும் இடம்

**நேசருக்கு மிக சிறந்ததைக் கொடுக்கும் நல்ல பங்கு**

தன் வாழ்வில் மிக சிறந்த நேரத்தை இயேசுவின் பாதத்தில் செலவிட்டாள். விலையேறப்பெற்ற நளதம் என்னும் தைலத்தை இயேசுவின் பாதத்தில் ஊற்றியதும்

இந்த மரியாளே. இது அவளின் அர்ப்பணிப்பை காட்டுகிறது. நாமும் கூட, நம் நேரம், திறமைகளை தேவனுக்காக அர்ப்பணிக்கும்போது ஆசீர்வதிக்கப்படுவோம். மரியாளின் பரணி உடைக்கப்பட்டபோது தான் நறுமணம் வீசியது. நாமும் கூட நம் இருதயத்தை, கண்ணீரொடு அவர் பாதத்தில் ஊற்றும்போது நறுமணம் வீசுகிறவர்களாக வாழ முடியும்.

**மரியாள் பெற்றுக்கொண்ட நன்மைகள்**

தன் ஆத்தும நேசரை மனதார திருப்திபடுத்தினாள். இயேசுவின் பாதத்தில் பரிமளம் பூசும் பாக்கியத்தை பெற்றாள்.

நாமும் கூட நம்மை, நம் வாழ்வை அவர் பாதத்தில் அர்ப்பணிப்போம். அவர் நமக்காக பட்ட பாடுகளை நினைத்து நன்றி உள்ள இருதயத்தோடு துதிப்போம். நமது நேரம், பணம், உழைப்பு, பெலன், திறமைகளை அர்ப்பணிப்போம். அவர் நம்மை விசாரிக்கிறவர். கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்து விடுவோம். நல்ல பங்கினை வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் தெரிந்தெடுக்க தேவன் நமக்கு உதவி செய்வாராக!

**ஷர்மிளா ராஜேஷ்**




Dear Children,

The theme this January is "**GOD IS GOOD**".




Everything that He does is good. God alone is morally, excellent, virtuous and righteous. God alone is without sin and therefore He alone is good.

Even if something happens that is far from good, even if there were something that could make God sad or cross, God will always think lovingly and with kindness towards us.





God loves us sooo much. He doesn't let anything get in the way of His love for us.

Our God is a good God who gives good gifts to His children. When we look for His goodness in the world around us, we will find it!


How great is Your goodness! You have stored it up for those who fear You. You do good things for those who trust You. — Psalm 31:19

**GOD'S GOODNESS IS GOOD ENOUGH FOR US!!**

## SAYING IT WITH PICTURES…




How abundant are the good things that you have stored up for those who fear you, that you bestow in the sight of all, on those who take refuge in you. – Psalm 31:19 NIV




Praise the LORD. Give thanks to the LORD, for he is good; his love endures forever. — Psalm 106:1 NIV

# NAMES OF GOD #1 ABBA FATHER

Knowing God by His personal names is one of the greatest privileges for followers of Christ. The word God is found throughout the Bible, but the Lord reveals Himself more personally through the names with which He introduces Himself in Scripture. These names help us when we address Him in prayer.

## ABBA FATHER: THE NAME THAT CHANGES EVERYTHING!

Galatians 4:6 says, "And because you are sons, God has sent forth the Spirit of His Son into your hearts, crying out, 'Abba, Father!'"




"Abba" is the Aramaic word meaning "Daddy" or "Father."

It's a term of warm affection, intimacy, and respect for one's father.

Jesus called God, "Our Father," in Matthew 6:9 and He gave us that same right.

### THE NAME OF GOD IS HOLY

The holy name of God should never be taken irreverently. "Hallowed be thy name," Jesus proclaimed in Matthew 6:9. The Bible also teaches that the name of Jesus is to be respected far above every earthly name.

## DID YOU KNOW...


The name of God was so sacred to the ancient Jewish scribes that they used a special pen to write the name of God as they reproduced the Scriptures. Each time they came to the name of God, they would set down the regular pen and pick up a pen that was used only for writing God's name. After saying a prayer, they would write God's name with the designated pen and then resume their work.

**Daily Application** – Today, most of the secular world-and even many within the church-have no concept of how offensive it is to heaven when we employ the name of God carelessly. Even angels mention God's name with the greatest awe, even veiling their faces when they speak the name of God.

Children, when we pray, reverently say God's name with a sense of the exalted character of God, and of Jesus Christ, His Son.

## TINY TOTS SECTION

## LISTEN TO THE SONG – GOD IS GOOD AS YOU COLOR IN...



**The Creation**

*God saw every thing that he had made, and, behold, it was very good* (Genesis 1:31).

## AND GOD SAW ALL THAT HE HAD MADE, AND IT WAS VERY GOOD (GEN 1:31)


### Spot the Differences for God Made the Animals

Compare the picture on the top with the picture on bottom. Circle the 17 things that are different.



Jesus said, "Look at the birds in the air. God provides everything they need."

Count the birds in the picture. Trace the correct number. 9 or 10 or 11 ?



Read and Trace the Bible Verse


"Give thanks to the Lord, for He is good"

Psalm 136:1

"Give thanks to
The Lord, for
He is good"
Psalm 136:1

**Our God in His Goodness has given us many wonderful gifts… Our family; Good health; Joy and Peace!**

**This family likes playing at the beach together. Can you find the hidden objects?**



# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION – "GOD IS GOOD"

1. Which Psalm begins with - "Oh, give thanks to the LORD, for He is good!"?

| | |
|---|---|
| a. Psalm 34 | b. Psalm 136 |
| c. Psalm 23 | d. Psalm 119 |

2. Nahum 1:7 says - The Lord is good; a refuge in trouble. Who does He care for?

| | |
|---|---|
| a. The righteous. | b. Those who trust in Him. |
| c. The poor and needy. | d. The humble in spirit. |

3. Which of these attributes is NOT used in the Bible to describe God's goodness?

| | |
|---|---|
| a. Merciful | b. Kind |
| c. Wrathful | d. Compassionate |

4. Exodus 34:6, which characteristic of God's goodness is mentioned first?

| | |
|---|---|
| a. Loving-kindness. | b. Patience. |
| c. Compassion. | d. Forgiveness. |

5. In Matthew 19:17, Jesus says, "There is only One who is good." Who is the ONE?

| | |
|---|---|
| a. Himself | b. God the Father |
| c. The Holy Spirit | d. The kingdom of heaven |

6. According to Lamentations 3:25, the Lord is good to whom?

| | |
|---|---|
| a. Those who serve Him. | b. Those who seek Him. |
| c. Those who obey Him. | d. Those who love Him. |

7. What does Psalm 100:5 declare about God's goodness?

| | |
|---|---|
| a. It is conditional. | b. It lasts for all generations. |
| c. It is shown only to the righteous. | d. It is beyond our understanding. |

8. What does Romans 2:4 say about God's goodness?

| | |
|---|---|
| a. It leads us to repentance. | b. It is beyond our comprehension. |
| c. It is reserved for believers. | d. It guarantees salvation. |

9. In Exodus 33:19, what does God say He will cause to pass in front of Moses?

| | |
|---|---|
| a. His glory | b. His goodness |
| c. His power | d. His righteousness |

10. In Psalm 107:1, what are people to do in response to God's goodness?

| | |
|---|---|
| a. Serve the Lord with gladness. | b. Proclaim His good works. |
| c. Give thanks to the Lord. | d. Follow His commandments. |


11. In 1 Peter 2:3, believers are encouraged to "taste and see" what?

| | |
|---|---|
| a. That the Lord is good | b. The blessings of faith |
| c. The power of the Holy Spirit. | d. The truth of God's Word |

12. In Galatians 5:22-23, "goodness" is listed as one of the fruit of what?

a. Faith b. The Holy Spirit c. Obedience d. Holiness

Put the lost words back in their places.




Find the letters P, L, E, A, S, E, and D.




And do not forget to do good and to share with others, for with such sacrifices God is

PLEASED. Hebrews 13:16 NIV©

Let's talk about it. Why is God pleased when we do good?

Race through the maze, collecting letters as you go. Place the letters in order in the blanks below to complete today's memory verse.




*For _ _ _ have _ _ _ _ _ _ _ _ and fall _ _ _ _ _ _*

*of the _ _ _ _ _ _ of God. Romans 3:23*

**But God sent His Son to save us!**


**What a Good God we have!**

**Ps. 34:8 says…**

**Find out for yourself how Good the Lord is!!**

**Find the hidden objects in the below picture, as you ponder on God's Goodness**

These Primary children in Germany had a family history day! Find 5 old photos and 10 pairs of scissors. Then find the other hidden objects.



# MISSIONARY JOURNEY

## APOSTLE # 1 SIMEON PETER



Simon Peter was one of the first followers of Jesus Christ.

He was one of Jesus' closest friends, an apostle, and a "pillar" of the church (Galatians 2:9).


Jesus reaffirmed Simon as Peter, the "Rock," in Matthew 16:18-19.


History records that around A.D. 44 (after persecution from King Herod Agrippa) Peter undertook missionary journeys to Lydda, Joppa, and Caesarea.

Peter wrote two inspired epistles, 1 and 2 Peter, between A.D. 60 and 68.


Jesus said that Peter would die a martyr's death (John 21:18-19)—a prophecy fulfilled, presumably, during Nero's reign.

Tradition has it that Peter was crucified upside down in Rome, and, although the story may be true, there is no scriptural or historical witness to the particulars of Peter's death.



# IN THE NEW YEAR 2025, REMEMBER...




## Our God Changes Not

In a world of much uncertainty
And void of Godly truth,
When everything around us shakes,
It's God we hold on to

We must not trust in what we see,
In what this world holds dear,
For often it will start to crumble
When we are least aware

We can know God's sustaining peace
When our future seems unsure,
And know our confidence in Him
Brings new hope in the Lord

Keep holding on to the Word of God,
The truth you can depend on,
For it will stand the test of time
When heaven and earth are gone

So, even though this world's unstable,
He's still our solid rock
And the only certainty in life,
For our God changes not.

## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below...

1. The theme for the month of January is: ___________________________________.
2. "Abba" is the Aramaic word meaning "_______________" or "_______________."
3. Ps. 136:1 says - ________________________________________________________ ____________________________________________________________________________.
4. ________________________ was one of the first followers of Jesus Christ.
5. History records that around A.D. 44, Peter undertook missionary journeys to ____________________________________, and ___________________.

Children, let our journey in this New Year 2025, be filled with the Lord's Presence and be led by the Holy Spirit.

God Bless,
**Mrs.Briliya Jeyaseelan**.

## Answers to December Children's Corner

### CHOOSE THE CORRECT OPTION – WISE MEN

1. b. Solomon
2. a. A star
3. b. Gold, frankincense, and myrrh
4. b. Bethlehem
5. b. King of the Jews
6. c. East.
7. b. Fear of the Lord.
8. b. Pray to God
9. a. Gold and silver
10. b. A builder on rock
11. b. Pure
12. a. Humility

## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below...

6. The theme for the month of December is: **WISE MEN**
7. Lessons we can glean from the story of the Wise Men...
   i. **JESUS IS FOR EVERYONE**
   ii. **JESUS IS WORTHY OF OUR WORSHIP**
   iii. **JESUS IS DESERVING OF OUR VERY BEST**
   iv. **JESUS IS SPEAKING TO US**
8. Revelations 21:1 says - **"Then I saw a new heaven and a new earth; for the first heaven and the first earth passed away"**
9. As children of God, we are called to **emulate His Love**, and embrace the simplicity and sincerity of **child – like faith** in our relationship with God.

***Note : Submit the answers of Bible Quiz to Pastor uncle or aunty on or before 25th of every month.***



# வேத வினாக்கள்

## வேதாகமம் முழுவதும்

**(சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)**

**கீழே கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளுடன் சம்பந்தப்பட்ட எண்களை வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து கொடுக்கப்பட்ட கணிதக் குறியீடுகளை பயன்படுத்தி விடையைக் கண்டுபிடியுங்கள்!**

அத்னாவினிடத்திலே இருந்த பராக்கிரமசாலிகள்

× கற்சாடிகள்

÷ ஆசாரிய வஸ்திரங்கள்

\+ வலதுகைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் அறியாதவர்கள்

\+ தெலாயிமிலே தொகை பார்க்கப்பட்ட காலாட்கள்

− பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்

− சாலொமோன் பலியிட்ட ஆடுகள்

− வஞ்சனை செய்யாமல் யுத்தத்திற்குப் போகத்தக்கவர்கள்

\+ சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள்

− பென்யமீனரில் பட்டயம் உருவுகிற பலவான்கள்

\+ இஸ்மவேல் விருத்தசேதனம் பண்ணப்பட்ட வயது

\+ அப்போஸ்தலர்

= ?

எதனைக் குறிக்கிறது ?

# டிசம்பர் மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

| கேள்வி எண் | பதில் | திருமறை ஆதாரம் வேதாகமம் முழுவதும் |
|---|---|---|
| 1 | எபூசி | யோசுவா 18:28 |
| 2 | யோசியா | 1 இராஜா. 13:2 |
| 3 | சிம்சோன் | நியாயா.13:19,24 |
| 4 | யாக்கோபிலிருந்து | எண். 24:17 |
| 5 | மோசே | யாத். 2: 1- 10 |
| 6 | பெரீயா | 1 நாளா. 7:23 |
| 7 | இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிறவன் | 1 யோவான் 5:1 |
| 8 | சரீரம் செத்தவனென்று எண்ணத்தகும் ஒருவனாலே | எபி. 11:12 |
| 9 | இயேசு | வெளி. 22:16 |
| 10 | நமக்காக பிறந்த பாலகன் | ஏசாயா 9:6 |
| 11 | இஸ்ரவேலர்களில் | ரோமர் 9:4,5 |
| 12 | பவுல் | அப்.22:3 & 21:40 |
| 13 | பென்யமீன் | ஆதி. 44:20 |
| 14 | அஸ்ரியேல் | 1 நாளா. 7:14 |
| 15 | மரியாளிடத்தில் | மத்தேயு 1:16 |

குறிப்பு : *அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் எழுதி ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் ஒப்படைக்கவும்.*

## டிசம்பர் மாத வேத வினாக்களுக்கு பதில் அளித்தவர்கள்

1. Mrs. Abisha Grace Rejin
2. Mrs. Ajita Ebi
3. Mr.Emmanuel
4. Mrs. Esther Pauline Rani
5. Mrs. Febell Jeevagi Thomas
6. Mrs.Geetha kannan
7. Mrs.Grace shekar
8. Mrs.Jebaseeli Asir
9. Mrs. Jenila Gannraj.L
10. Mrs.Jasmine Sobha
11. Mr. Jeba Jino
12. Mrs. Manuel Sarah
13. Mr. Prawin Durai Sam
14. Mrs.Praveena Arun
15. Mr.Selva Shaji
16. Mrs.Sheeba Merlin
17. Mrs.Sheeba Herlin
18. Mrs. Subija Jino
19. Mrs . Sharmila Rajesh
20. Mrs.Subi Kishore

## Children who answered December – 2025 Quiz

1. Aaran
2. Aadhav Steve Matthew
3. Adelyn Victoria Jeyaseelan
4. Camryn Robert.S
5. Clement Dave
6. Danion Lemuel
7. Daniel Vanya (RUWAIS)
8. Evelyn Gracia
9. Evelyn Loria V
10. Galvin Robert.S
11. Gabrilyn Hannah
12. Giana Elin
13. Jevlyn Ana
14. Jerilyn Pushpam Nelson
15. Johan Sam Manuel
16. Joha Anit Manuel
17. Jeya Jehosheba Maher
18. Jeya Joshua Maher
19. Jen Scudd
20. Jim Scott
21. Johanan Paul Jino
22. Joanna Paul Jino
23. Jaylan paul Jino
24. Joshuva koshy
25. Jaslin shanna
26. Jebasheba .M
27. Joel Abrakam
28. Jarick Aaron
29. Kev Shannen.P.S
30. Liana Erin
31. Leona Juliet
32. Steffi Priscilla .R
33. Starlyne Noble
34. Sam Jesvin Vincent
35. Yedidiah Arun (Ruwais)
36. Yovaan jairus (Ruwais)



# இயேசுவின் சீடர் தோமா

***இந்தியாவின் அப்போஸ்தலர்***

**உயிர்த்தெழுந்த இயேசுவும் தோமாவும்**

இயேசு கிறிஸ்து மரித்து உயிரோடெழுந்த அன்று மாலையில், அவர் உயிரோடு எழுந்ததை அறியாத சீடர்கள் யூதர்களுக்குப் பயந்து ஒரு வீட்டிற்குள் பதுங்கியிருந்தனர். தோமா மட்டும் தைரியமாக வெளியே சென்றிருந்தார். அந்த சமயத்தில், வீட்டிற்குள் பதுங்கியிருந்த சீடர்களுக்கு இயேசு கிறிஸ்து தரிசனமானார்.

அந்த வீட்டிற்குத் திரும்பி வந்த தோமா, அதை நம்பவில்லை. ஆகவே, அவருக்காகவே இயேசு கிறிஸ்து மீண்டும் தரிசனமாகி, சந்தேகப்பட்ட தோமாவிடம் தனது விலாவைக் காண்பித்து, அதிலே கையைப் போட்டுப் பார்க்கச் சொல்லி, தன்னிடத்தில் விசுவாசமாக இருக்கும்படியாகச் சொன்னார்.

உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவை தரிசித்த தோமா, அவர் மீது கொண்டிருந்த அன்பின் மிகுதியால், “என் ஆண்டவரே! என் தேவனே!” என்றான் [யோவான் 20:28].

வேத அறிஞர்கள், ‘எந்தவொரு அப்போஸ்தலரும் இயேசு கிறிஸ்துவை இவ்வளவு உயர்வான வார்த்தைகளால் அறிக்கையிட்டது இல்லை!’ எனக் கூறுகிறார்கள்.

இயேசு கிறிஸ்து தோமாவின் சொந்த ஊரான திபேரியாவின் கடற்கரையிலே, அவருக்கும், மற்ற சீடர்களுக்கும் தம்மை வெளிப்படுத்தினார் [யோவான் 21:1]. பேதுருவோடு மீன் பிடிக்கச் சென்ற தோமாவும், மற்ற சீடர்களும் இரவு முழுவதும் பிரயாசப்பட்டும் ஒரு மீனும் அகப்படவில்லை. பின்பு இயேசு கிறிஸ்து அவர்களுக்கு தரிசனமாகி, “வலையை படகிற்கு வலப்புறமாக போடுங்கள்” என்று கட்டளையிட்டார். அவருடைய வார்த்தைக்கு அவர்கள் கீழ்ப்படிந்ததால், வலை கிழியத்தக்க அளவிற்கு திரளான

மீன்கள் கிடைத்தது! இந்த சம்பவத்தின் மூலமாக இயேசு கிறிஸ்துவின் மீது இருந்த தோமாவின் விசுவாசம் இன்னும் பல மடங்கு அதிகரித்தது.

**இந்தியர்களுக்கு ஊழியம் செய்ய, தேவனின் அழைப்பு!**

இயேசு கிறிஸ்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு, எருசலேமிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், தோமாவும் மற்ற அப்போஸ்தலர்களும் ஊழியம் செய்து வந்தனர். எருசலேமில் திருச்சபை ஸ்திரபட்ட பின்பு அப்போஸ்தலர்கள் அனைவரும் கூடி, "நீங்கள் உலகெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" [மாற்கு 16:15] என்று, இயேசு கிறிஸ்து தங்களுக்குக் கடைசியாகக் கட்டளையிட்டதை நிறைவேற்ற திட்டம் இட்டனர்.

ஆகவே உலகத்தை பன்னிரண்டு பகுதிகளாகப் பிரித்தனர். அப்போஸ்தலர் நடபடிகள் முதலாம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, யூதா ஸ்காோதரியோத்தின் இடத்திற்கு உரியவரை தெரிந்தெடுக்க சீட்டுப் போடப்பட்டதைப் போல, பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் தங்களுக்கு சீட்டு விழுந்த பகுதிகளுக்குச் செல்ல மனப் பூர்வமாக சம்மதித்தனர்.

தோமாவிற்கு கிழக்கத்திய நாடுகளான இந்தியா மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் ஊழியம் செய்வதற்கான சீட்டு விழுந்தது. அப்பொழுது அவர், 'எபிரெயனாகிய நான் எப்படி இந்தியர்கள் மத்தியில் போய் ஊழியம் செய்வது?" என மறுப்பு தெரிவித்தார். காரணம், இந்தியாவில் வணிகம் செய்து கொண்டு, எருசலேமில் வசித்த யூதர்களில் சிலர் மூலமாக, "இந்தியர்கள் கொடூரமானவர்கள்! கொலைகாரர்கள்! என்ற தவறான செய்தியை தோமா கேள்விப் பட்டிருந்தபடியினால், கொஞ்சம் தயக்கம் காட்டினார்.

அன்று இரவில் இயேசு கிறிஸ்து தோமாவிற்கு தரிசனமாகி, "தோமாவே, இந்தியாவிற்குப் போக பயப்படாதே! அங்கு போய் என் சுவிசேஷத்தை அறிவி! என் கிருபை உன்னோடே இருக்கும்!" என்று சொன்னார். ஆனால் தோமாவோ, அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், "என்னை இந்த உலகத்தில் வேறு எந்த மூலைக்கு வேண்டுமானாலும் அனுப்பும், நான் போகிறேன். ஆனால், இந்தியாவிற்கு மட்டும் போகவே மாட்டேன்" என்று மறுப்பு தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து, 'கொந்தபோரஸ்' என்கிற மன்னனால் அனுப்பப்பட்ட, 'அப்பனேயு' என்கிற வணிகன், மிகச் சிறந்த ஒரு தச்சனை விலை கொடுத்து வாங்கி வர, அங்குள்ள அடிமைகளை விற்கும் சந்தைக்கு வந்திருந்தார். அப்பொழுது இயேசு கிறிஸ்து அந்த வணிகனிடம் சென்று, "என்னிடத்தில் மிகச் சிறந்த ஒரு தச்சன் இருக்கிறான். நான் அவனை விற்க விரும்புகிறேன்" என்று கூறி, தூரத்தில் நடந்து போய் கொண்டிருந்த தோமாவை அவனிடம் காண்பித்தார்.

- **தொடரும்**



## பாடல் பிறந்த கதை

**ஊதும் தெய்வாவியை [பாமாலை 274]**
**Breathe in me Breath of God]**

1. ஊதும் தெய்வாவியை
புத்துயிர் நிரம்ப
நாதா என் வாஞ்சை செய்கையில்
உம்மைப் போல் ஆகிட

2. ஊதும் தெய்வாவியை
தூய்மையால் நிரம்ப
உம்மில் ஒன்றாகி யாவையும்
சகிக்க செய்திட

3. ஊதும் தெய்வாவியை
முற்றும் ஆட்கொள்ளுவீர்
தீதான தேகம் மனத்தில்
வானாக்னி மூட்டுவீர்

4. ஊதும் தெய்வாவியை
சாகேன் நான் என்றுமாய்
சதாவாய் வாழ்வேன் உம்மோடு
பூரண ஜீவியாய்

**'தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்.'** ***ஆதி. 2 : 7***

சு**வாசம்** அல்லது **ஜீவசுவாசம்** எனும் வார்த்தை கிறிஸ்தவ வாழ்வில் எப்போதும் ஒரு முக்கிய அங்கம் வகித்து வந்திருக்கிறது. ஆதியிலே "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்" என்று ஆதியாகமம் 2:7ல் நாம் வாசிக்கிறோம். தேவன் தம் படைப்பின் கிரியைகளில் விளங்கப் பண்ணினதில் மகா அதிசயமான ஒன்று இந்த 'ஜீவசுவாசம்'. 'ஜீவசுவாசம்' அல்லது 'சுவாசம்' என்பது 'பரிசுத்த ஆவியானவரை'க் குறிக்கும் சொல்லாகவும் விளங்கி வந்திருக்கிறது. "பரிசுத்த

ஆவியானவர்" "சுவாசம்" எனும் இரு சொற்களையும் குறிப்பிட, கிரேக்க மொழியில் 'pneuma' என்ற ஒரே சொல்லும், லத்தீன் மொழியில் 'spiritus' என்ற ஒரே சொல்லும் உபயோகிக்கப் படுகிறது.

பரிசுத்த ஆவியானவரை தம் படைப்பாகிய மனிதனுள் ஆண்டவர் ஜீவசுவாசமாக ஊதி உயிர்ப்பூட்டிய நிகழ்வின் அற்புதத்தை எட்வின் ஹேட்ச் (Edwin Hatch - 1835-89) எனும் போதகர், 'ஊதும் தெய்வாவியை' எனும் இந்த அழகிய பாடலாக உருவாக்கினார். 1878'ம் ஆண்டு வெளியான 'Between Doubt and Prayer' எனும் ஒரு துண்டுப் பிரசுரத்தில் இப்பாடல் முதன்முதலில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

ஆண்டவரைப் பற்றி அறிந்திராத பெற்றோருக்குப் பிறந்த எட்வின், தம் பள்ளிப்படிப்பை பர்மிங்ஹாமில் உள்ள எட்வர்ட் பள்ளியிலும் (King Edward School, Birmingham) தம் கல்லூரிப் படிப்பை ஆக்ஸ்ஃபோர்டிலும் (Pembroke College, Oxford) முடித்தார். கல்லூரிக் காலத்தில் எட்வினின் நண்பர்கள் ஓவியம், கவிதைகள் என்று ஆர்வம் நிறைந்தவர்களாய் இருந்தபோது அவர்களுடன் எட்வினும் நிறைய விமர்சனங்கள் (Reviews), நாளிதழ் கட்டுரைகள் போன்றவற்றை எழுதுவதில் ஆர்வம் காட்டினார். கல்லூரிப் படிப்பு முடிந்து அவருடைய நண்பர்கள் கலை மற்றும் இலக்கியத் துறையில் ஆர்வம்கொண்டு செல்ல, எட்வின் Church of England'ல் போதகராக அபிஷேகம் பெற்று, லண்டனின் கிழக்குப் பகுதியில் இருந்த தேவாலயம் ஒன்றில் ஆயராகப் பணி செய்யத் துவங்கினார்.

பின்னர் 1859 முதல் 1867வரை கனடாவின் Trinity College'ல் பேராசிரியராகப் பணிபுரிந்த இவர், 1867ல் இங்கிலாந்துக்குத் திரும்பி, Oxford St. Mary's Hall'ன் துணை முதல்வராகப் பொறுப்பேற்றார். மேலும் Rector of Purleigh in Essex, University Reader in Ecclesiastical History என்று கல்வித்துறையின் பல்வேறு உயர் பதவிகளைக் கண்டார். இத்தனை பெரும் பதவிகள் வகித்தும், எட்வின், மிகவும் எளிமையான, பக்திநிறைந்த ஒரு மனிதராகத் திகழ்ந்தார்.

.

# ஆலயப் பக்கம்



## ஆராதனை மற்றும் நிகழ்வுகள் – டிசம்பர் 2025

| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 1 | புதன் | 5.00 am – 7.00 am | புது வருட திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |
| 3 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 5 | ஞாயிறு | 12.00 pm – 2.00 pm | உபவாச ஜெபம் |
| | | 2.00 pm – 3.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் & ஆண்கள் ஐக்கிய சங்கம் |
| 7 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 10 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 12 | ஞாயிறு | 5.30 pm – 6.30 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் – முசாபா |
| 14 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 17 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 19 | ஞாயிறு | 7.00 pm – 8.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் – ஆயர் இல்லம் |
| 21 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி - ஆயர் இல்லம் |
| 24 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 26 | ஞாயிறு | 8.00 pm – 9.00 pm | வாலிபர் கூடுகை |
| 28 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 31 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய திடப்படுத்தல் ஆராதனை - St.Andrew's church |

# ஆராதனை பாடல்கள் – டிசம்பர் 2025

| | |
|---|---|
| **01-01-25** | |
| பாமாலை – 80 | இன்னோர் ஆண்டு முற்றுமாய் |
| பாமாலை – 78 | ஆண்டவா உமக்கே ஸ்தோத்ரம் |
| கீர்த்தனை – 302 & 303 | ஆனந்தமே ஜெயா! ஜெயா!<br>எந்நாளுமே துதிப்பாய் |
| பாமாலை – 9 | பூலோகத்தாரே யாவரும் |
| **03-01-25** | |
| பாமாலை – 02 | உம்மை துதிக்கிறோம் |
| பாமாலை – 87 | விண்மீன் நோக்கி களிப்பாய் |
| கீர்த்தனை – 34 & 17 | அரசனைக் காணாமலிருப்போமோ<br>கண்களை ஏறெடுப்பேன் |
| பாமாலை – 35 | எங்கள் ஊக்க வேண்டல் கேளும் |
| **10-01-25** | |
| பாமாலை – 14 | அநாதியான கர்த்தரே |
| பாமாலை – 302 | என் தன் ஜீவன், இயேசுவே |
| கீர்த்தனை – 237 & 77 | தந்தானைத் துதிப்போமே<br>சீர் ஏசு நாதனுக்கு ஜெயமங்களம் |
| பாமாலை – 212 | பகலோன் கதிர் போலுமே |
| **17-01-25** | |
| பாமாலை – 22 | தூய தூய தூயா |
| பாமாலை – 258 | இயேசுவே உம்மை தியானித்தால் |
| கீர்த்தனை – 169 & 79 | தேவனே நான் உமதண்டையில்<br>தோத்திரம் செய்வேனே |
| கீர்த்தனை – 4 | சீர் திரியேக வஸ்தே நமோ நமோ |
| **24-01-25** | |
| பாமாலை – 10 | போற்றிடு ஆன்மமே |
| பாமாலை – 295 | அருள் மாரி எங்குமாக |
| கீர்த்தனை – 217 & 105 | அன்பே பிரதானம்<br>தேன் இனிமையிலும் இயேசுவின் நாமம் |
| கீர்த்தனை – 320 | மங்களம் சதா – ஜெய மங்களம் |
| **31-01-25** | |
| பாமாலை – 276 | சுத்த ஆவி என்னில் தங்கும் |
| பாமாலை – 139 | தெய்வாவீ மனவாசராய் |
| பாமாலை – 277 | மா தூய ஆவி இறங்கும் |
| கீர்த்தனை – 187 & 189 | தந்தேன் என்னை இயேசுவே<br>என்னை ஜீவபலியாய் |
| பாமாலை – 239 | இயேசு கற்பித்தார் ஒளி வீசவே |
| பாமாலை – 261 | எல்லாருக்கும் மா உன்னதர் |

# திருமறை பாட ஒழுங்குகள் – டிசம்பர் 2025

| தேதி | தியானப்பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| **01-01-25** | புது வருடம் | நாகூம் 1:1-7 | அப். 10:34-43 | யோவான் 1:43-50 | 65 |
| **03-01-25** | கிறிஸ்து தம்மை வெளிப்படுத்துதல் | ஏசாயா 45:18-25 | 1பேதுரு 1:13-22 | யோவான் 12:20-32 | - |
| **10-01-25** | ஒரே ஞானஸ்நானம் | ஆமோஸ் 9:5-12 | எபேசியர் 4:1-6 | மத்தேயு 16:13-20 | 67 |
| **17-01-25** | இயேசுவே இரட்சகர் | ஆதி. 16:1-16 | எபிரேயர் 1:1-14 | மத்தேயு 3:13-17 | |
| **24-01-25** | பரிசுத்தம் | உபாகமம் 9:5-12 | எபேசியர் 4:17-27 | யோவான் 17:13-17 | 5 |
| **31-01-25** | **திடப்படுத்தல் ஆராதனை** | | | | |

# செவ்வாய் கிழமை – ஏரியா ஜெப குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேதபகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| **07-01-25** | சங்கீதம் | 149 | Musaffah |
| **14-01-25** | சங்கீதம் | 150 | TCA |
| **21-01-25** | **ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி** | | |
| **28-01-25** | சங்கீதம் | 1 | Al Wadha |

# BIRTHDAY - JANUARY




| Date | Title | Name |
|---|---|---|
| 1 | Mrs. | Newline Selvakumari |
| 2 | Mrs. | Annie Shelton Sam |
| 2 | Master | Jenish J |
| 5 | Mrs. | Mathi Malar |
| 5 | Baby | James Bezalel |
| 5 | Mr. | Rovin Samuel |
| 6 | Mrs. | Ezhil |
| 6 | Mrs. | Preethi S |
| 7 | Mr. | Selvin Samuel |
| 8 | Ms. | Joanna R.S. |
| 8 | Mr. | Jenson Soundar Raj K |
| 9 | Miss. | Juwana Steffi P |
| 9 | Mrs. | Angelin Prasanna |
| 9 | Master. | Vimal Melwyn. R |
| 10 | Mrs. | Thamarai Selvi |
| 11 | Mr. | Paul Emerson Karunakaran |
| 12 | Ms. | Dhini Shekinah Albert |
| 12 | Mrs. | Nanthini Rajkumar |
| 13 | Miss. | Joanna Paul Jino |
| 15 | Mrs. | Jeba Samuel |
| 15 | Mr. | Uday Saul |
| 15 | Mr. | Judson Sundaradhas |
| 16 | Mrs. | Adeline Crishanth |
| 16 | Mrs. | Desigta Thomas |
| 16 | Mr. | Nithin Sekhar |

# BIRTHDAY - JANUARY




| Date | Title | Name |
|---|---|---|
| **17** | Mrs. Dr. | Savitha Rajakumar |
| **17** | Mrs. | Peppin Bright |
| **18** | Master | Jarick Aaron |
| **19** | Ms. | Joha Anit Manuel |
| **20** | Mrs. | Epsy Janet Bai |
| **20** | Master. | Jershan Selva Shaji |
| **21** | Mrs. | PRINCY CATHERINE |
| **22** | Mr. | Albert Raj T |
| **23** | Master. | Giftus Samuel |
| **24** | Ms. | Caron Sylvia |
| **24** | Mrs. | Ageno Simple |
| **25** | Mrs. | Vidhya Jebas |
| **25** | Mr. | Jebakumar Benjamin |
| **25** | Mrs. | Latha Santhosamani |
| **25** | Mrs. | Sharon Deborah P |
| **26** | Mr. | Galvin Robert |
| **27** | Ms | J. D. Merlin Deva Kirubi |
| **28** | Ms. | Binu Jeritta |
| **29** | Master. | Johan Sam Manuel |
| **30** | Ms. | Elizabeth Miraclyn |
| **30** | Mrs. | Juliet Vanitha |
| **31** | Mrs. | Agnes Regini Arun |
| **31** | Baby | Giselle Benny |

# WEDDING ANNIVERSARY – JANUARY




| Wedding Date | Title | Name |
|---|---|---|
| 3 | Mr. & Mrs. | Melwin Joseph |
| 3 | Mr. & Mrs. | Stephenson |
| 4 | Mr. & Mrs. | Solomon Susinder |
| 4 | Mr. & Mrs. | Sundar Jebakumar T. |
| 5 | Mr. & Mrs. | Raja. A.K |
| 6 | Mr. & Mrs. | Renald Daniel R |
| 9 | Mr. & Mrs. | Jose Joseph Raj |
| 9 | Mr. & Mrs. | Benny Emmanuel |
| 10 | Mr. & Mrs. | Sathia Saul Raj P S |
| 11 | Mr. & Mrs. | Jenson Soundar Raj K |
| 11 | Mr. & Mrs. | Jacob Raj. J |
| 19 | Mr. & Mrs. | Praveen Sharon |
| 21 | Mr. & Mrs. | Johnson Prabu |
| 22 | Mr. & Mrs. | Samuel Bhaskar W |
| 25 | Mr. & Mrs. | Vimal Mohan |
| 26 | Mr. & Mrs. | Yuvesh Ray |
| 26 | Mr. & Mrs. | Rajan Sagariya Nadar |
| 26 | Mr. & Mrs. | Ansel Regi |
| 26 | Mr. & Mrs. | Daniel Abraham |
| 27 | Mr. & Mrs. | Vethakkan Pandian |

கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு










## Carol Service










Carol Service













Junior Church Christmas Tree Program
















Women's Fellowship Christmas Meet




CSI TAMIL
PARISH
ABU DHABI


CSI TAMIL
PARISH
ABU DHABI


CSI TAMIL
PARISH
ABU DHABI



## Camp Brothers' Christmas Program



## Bachelors' Christmas Get Together






Young couples' Christmas meet









*The Lord is good, a refuge in times of trouble. He cares for those who trust in him. Nahum 1:7*